அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.31/94

எனது இல. 1/543/ஈ/807/டி/3/94
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
1994, ஆகஸ்ட் ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

1992, மார்ச் 4ஆந் திகதியன்று இநிசேயை உஆநிசேயுடன் சேர்த்து உள்வாங்கப்பட்டதால் உருவாக்கப்பட்ட முரண்பாடுகளைச் சரிப்படுத்தல்.

1992.05.05 ஆந் திகதிய 20/92, 1994.03.30 ஆந் திகதிய 14/94 ஆகிய இலக்கங்களைக் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்குப் பார்வை ஈர்க்கப்படுகிறது.

02. 1992, மார்ச் 4ஆந் திகதியன்று சேவையிலிருந்த வகுப்பு 1 இல் உள்ள இநிசே அலுவலர் ஒருவர், அவர் பதவியுயர்வுக்கு வேறேதும் வகையில் தகைமை இழந்திருந்தால் அன்றி, இநிசேயில் பதினோர் (11) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ள திகதியிலிருந்து செயற்படுமாறு பதவியணிக்கு மேல் என்ற அடிப்படையில் பதவி உயர்வை முன் திகதியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03. இத் தீர்மானத்தால் இநிசே வகுப்பு 1இல் உள்ள இரு வகுதியைச் சேர்ந்தவர்கள் பயனடைவார்கள் என்பதைத் தயவு செய்து கவனிக்கவும். அவை:

(அ) 1992.03.04க்கு முன்னர் இநிசே வகுப்பு 1க்குப் பதவி உயர்த்தப்பட்டவர்கள், அத்துடன்

(ஆ) 1992.03.04 அன்று இநிசே வகுப்பு 1க்குப் பதவி உயர்த்தப்பட்டவர்கள்.

04. 1994.01.01 முதல் இருந்து மட்டுமே சம்பள நிலுவைகள் கொடுபட வேண்டும்.

05. மேற்குறித்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பில் முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை எனக்கு அவர்களது திணைக்களத் தலைவர்களினதும் அமைச்சுக்களினது செயலாளர்களினதும் ஊடாக அனுப்பி வைக்குமாறு உரிய இநிசே அலுவலர்களுக்கு அறிவிக்கப்படலாம்.

06. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்: வை. பீ. புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

வடிவமைப்பு

1992, மார்ச் 4ஆந் திகதியன்று இநிசேயை உஆநிசேயுள் உள்வாங்கப் பட்டதால் இநிசேயில் உருவாக்கப்பட்ட சம்பள முரன்பாடுகளைச் சீர்படுத்தல் :

பாகம் I

01. (அ) அலுவலரின் பெயர் :-
(ஆ) இநிசேக்கு நியமிக்கப்பட்ட திகதி :-
(இ) இநிசே வகுப்பு II/I க்கு நியமிக்கப்பட்ட திகதி:-
(ஈ) இநிசே வகுப்பு I க்கு நியமிக்கப்பட்ட திகதி:-

02. (அ) இப்போதைய பதவியும் திணைக்களமும்:-
(ஆ) அலுவலக முகவரி:-

03. இநிசேக்குச் சேர்க்கப்பட்ட முறை :-
திறந்த போட்டி/வரையறுக்கப்பட்ட போட்டி/திறமையில் பதவியுயர்வு.

04. இப்போதைய ஆண்டுச் சம்பளம்:-

05. .......ஆம் திகதிய ...... ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி வகுப்பு I க்கு நியமிக்கப்பட்ட நான் தகுதியுடையவர்; இநிசே குறிப்பு நிபந்தனைகளின்படி பதவியுயர்வுக்கு நான் தகுதி இழந்தவர் அல்லர்; அத்துடன், என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் என் நல்லறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:-

..................
விண்ணப்பகாரியின் கையொப்பம்.

## பாகம் II

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

தி/திருமதி/செல்வி......................அவர்களால் இப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்களைச் செவ்வைபார்த்து, அவரது தனிப்பட்ட கோவையிலுள்ள தகவல்களின்படி சரியானவையென நான் உறுதிப்படுத்துகிறேன். அவர் 1994..... ஆந் திகதிய .......ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நிபந்தனைகளின்படி இநிசே I ஆம் வகுப்புக்குப் பதவியுயர்த்தப்படத் தகைமையுடையவர்/ இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தரப்பட்டுள்ள காரணங்களால் இவ்விண்ணப்பத்தை விதப்புரை செய்ய முடியாது.

(பொருத்தமற்றதை நீக்கிவிடுக)

திகதி:..........

................
கையொப்பம்
பெயரும் பதவியும்

## பாகம் III

திரு/திருமதி/செல்வி......................1994.......ஆந் திகதிய .....ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நிபந்தனைகளின்படி பதவி உயர்த்தப்படத் தகைமையுடையவர்/தகைமையற்றவர்.

நான் இவ்விண்ணப்பத்தை விதப்புரை செய்கிறேன்/விதப்புரை செய்யவில்லை.

(பொருத்தமற்றதை நீக்கிவிடுக)

திகதி:..........

................
கையொப்பம்

செயலாளர்,
..............அமைச்சு.